**THOOTHUKUDI CITY MUNICIPAL CORPORATION**

**FORM -3**

**MINUTES OF THE COUNCIL MEETINGS**

**(See rule 5 and Serial Number 3 of Appendix 1)**

## அவசரக் கூட்டப்பொருள்

2012ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ஆம் நாள் திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு 2008 ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை 1 பிரிவு எண் 3 (2)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள மாமன்ற கூட்டரங்கத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

| மாமன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மாமன்றப் பொருள் | | மாமன்ற தீர்மானம் |
|---|---|---|---|
| 24.12.12 | 1. | இம்மாநகராட்சிக்குட்பட்ட பகுதியான திருச்செந்தூர் ரோடு மற்றும் புறவழிச்சாலை இணையும் இடமானது (உப்பாற்று ஓடை ரவுண்டானா) துறைமுகத்திற்கு அதிக பாரங்களோடு வந்து செல்லும் கனரக வாகனங்கள் மற்றும் பல்வேறு வாகனங்கள் வெளியூருக்கு கடந்து செல்லும் போக்குவரத்து மிகுந்த பகுதியாகும். மேற்படி ரவுண்டானா பகுதியானது நெடுநாளாக போதிய பராமரிப்பின்றி காணப்படுவதால் விபத்துக்கள் தொடர்ச்சியாக ஏற்பட்டு வருகின்றன. மேற்படி பகுதியில் போதிய மின் விளக்குகள் இல்லாததால், சில சமயங்களில் உயிர் சேதமும் ஏற்பட்டு விடுகிறது. மேலும் பிற நகரங்களில் இருந்து வரும் பயணிகள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இச்சாலையினை பெருமளவில் பயன்படுத்துவதால் இம்மாநகரத்தை குறித்து விமர்சிக்கக்கூடிய சூழல் ஏற்படுகிறது. எனவே மேற்படி ரவுண்டானாவை முழுமையாக அப்புறப்படுத்தி போக்குவரத்து சிரமமின்றி அமைய ஏதுவாகவோ அல்லது வண்ண பூஞ்செடிகள் மற்றும் உயர்மின் கோபுர மின்விளக்குகளுடன் (Highmass Light) கூடிய முழுமையான ரவுண்டானாவாக உடனடியாக கட்டி முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நெடுஞ்சாலைத்துறையினரிடம் தெரிவிக்க மாமன்றம் தீர்மானிக்க. | 259) ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது |
| | 2. | தூத்துக்குடி மாநகரப்பகுதியில் வசித்து வரும் பொதுமக்களுக்கு பொழுதுபோக்கினை கழிப்பதற்கு போதிய வழிவகை இல்லாததால் பொழுது போக்கு அம்சத்துடனும் கூடிய சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையிலும், வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ''வான் தீவு'' அமைந்துள்ள இடத்தில் பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய விளையாட்டு சாதனங்கள், சிற்றுண்டி மற்றும் உணவு விடுதிகள் அமைத்து மாநகர கடலோர பகுதியில் இருந்து மேற்படி பகுதிக்கு படகுகள் மூலம் பொதுமக்கள் பயணித்து பயன்பெறும் வகையில் பயன்பாட்டிற்கு கொண்டு வர வ.உ.சிதம்பரனார் துறைமுக கழகம் நடவடிக்கை மேற்கொள்ள, தலைவர், வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகத்தை கேட்டுக்கொள்ள மாமன்றம் தீர்மானிக்க. | 260) ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது |

3. தூத்துக்குடி மாநகராட்சிக்குட்பட்ட பாளையங்கோட்டை ரோடு மேற்கு முதல் கிரேட் காட்டன் ரோடு வரை (3வது மைல் மேம்பாலம் முதல் சின்னகோவில் வரை) அமைந்துள்ள பிரதான சாலையானது நெடுஞ்சாலைத்துறையினரின் பராமரிப்பில் இருந்து வருகிறது. மேற்படி சாலையானது நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கனரக வாகனங்கள், இலகுரக வாகனங்கள் என பல்வேறு வகையில் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் பொருட்டு மேற்படி சாலை தற்போது தேய்வடைந்தும், பல்வேறு இடங்களில் சாலை பழுதடைந்தும் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் காணப்படுகிறது. எனவே மேற்படி சாலையில் தங்கு தடையின்றி போக்குவரத்து அமைய ஏதுவாக மேற்படி சாலையினை புதுப்பிக்குமாறு நெடுஞ்சாலைத்துறையினரிடம் தெரிவிக்க மாமன்றம் தீர்மானிக்க.

**261)** ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது

4. இம்மாநகராட்சிக்குட்பட்ட 59வது வார்டு பகுதியில் நெடுஞ்சாலைத்துறையினருக்குச் சொந்தமான திருச்செந்தூர் ரோட்டில் புனித அந்தோணியார் உயர்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. மேற்படி பகுதியில் எந்நேரமும் வாகனப் போக்குவரத்து அதிகளவில் காணப்படுகிறது. இதன் பொருட்டு மாணவ, மாணவியர் சாலையினை கடப்பதற்கு மிகவும் சிரமப்படுகின்றனர். மேலும் பல்வேறு வாகனங்கள் அதிக வேகத்துடன் வருவதால் மேற்படி பகுதியில் அடிக்கடி விபத்துக்கள் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. எனவே மேற்கண்ட பள்ளி மாணவ மாணவியர்களின் நலனைக் கருத்தில் கொண்டு இப்பகுதியில் செல்லும் வாகனங்களின் வேகத்தை கட்டுப்படுத்தும் விதத்தில் மேற்படி பள்ளியின் முன்பு வேகத்தடை அமைத்து விபத்துக்களை தடுக்க சம்பந்தப்பட்ட நெடுஞ்சாலைத்துறையினருக்கு தெரிவிக்க மாமன்றம் தீர்மானிக்க.

**262)**ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது

5. இம்மாநகராட்சியின் பொதுசுகாதார பிரிவில் துப்புரவு பணியாளர்களாக பணிபுரிந்து பணியிடையில் காலமான கீழ்க்கண்டுள்ள துப்புரவு பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை, வட்டி ஆகியன கணக்கிடப்பட்டு கீழ்க்கண்டுள்ளவாறு அன்னார்களின் வாரிசுகளுக்கு வழங்க வேண்டியதுள்ளது.

| வ. எண் | துப்புரவு பணியாளர் பெயர் திரு/திருமதி | காலமான தேதி | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை | வட்டி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | மாரியம்மாள்/பிச்சம்மாள், இறப்பு | 21.03.11 | 2960/– | 12239/– | 15199/– |
| 2. | சண்முகம்/ மாடசாமி, இறப்பு | 27.05.11 | 2960/– | 12623 | 15583/– |
| 3. | மனோகரன்/முனியாண்டி, இறப்பு | 19.08.11 | 2960/– | 12720/– | 15680/– |
| 4. | பால்ராஜ்/ மாடசாமி, இறப்பு | 07.01.12 | 2960/– | 13246/– | 16206/– |
| 5. | புதியவன்/சிவஞானம், இறப்பு | 25.04.12 | 2960/– | 13558/– | 16518/– |
| | **மொத்தம்** | | **14800/–** | **64386/–** | **79186/–** |

எனவே பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள துப்புரவு பணியாளர்களாக பணிபுரிந்து பணியிடையில் காலமான அன்னார்களின் வாரிசுதாரர்களுக்கு மேற்கண்ட தொகையினை, மாநகராட்சியின் பொதுநிதியில் இருந்து வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** அனுமதிக்கலாம்

எச்2/8443/2011

**263)** அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

6. இம்மாநகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவின் கீழ் இயங்குகின்ற நகர்நல மையங்களில் பணிபுரிந்து 31.07.2012 அன்று வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற கீழ்க்கண்டுள்ள பணியாளர்களுக்கு சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை, வட்டி மற்றும் அரசின் பங்கீட்டு தொகை ஆகியன கணக்கிடப்பட்டு கீழ்க்கண்டுள்ளவாறு வழங்க வேண்டியதுள்ளது.

**264)** அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

| வ. எண் | பணியாளர் பெயர் திரு/திருமதி | ஓய்வு பெற்ற தேதி | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை | வட்டி | பங்கீட்டுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | முருகன்/சின்ன மாரியப்பன் | 31.07.12 | 2960/– | 13870/– | 10000/– | 26830/– |
| 2. | மாடத்தி/பெருமாள் | 31.07.12 | 2960/– | 13870/– | 10000/– | 26830/– |
| | **மொத்தம்** | | **5920/–** | **27740/–** | **20000/–** | **53660/–** |

எனவே பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்களுக்கு மேற்கண்ட தொகையினை, மாநகராட்சியின் பொது நிதியில் இருந்து வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

எச்2/12205/2012

7. அரசாணை எண் 354 நாள் 23.10.2009ல் மருத்துவம் மற்றும் குடும்பநலத் துறையில் பணியாற்றும் மருத்துவ அலுவலர்களுக்கு 5 படிகளில் பதவி உயர்வு வழங்கி ஊதியம் நிர்ணயம் செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்பேரில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண் 583 நாள் 26.11.2010ல் மாநகராட்சி/நகராட்சிகளில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கு (Time Bound Nomination) பதவி உயர்வுடன் கூடிய ஊதிய உயர்வு 5 படிகளில் கீழ்க்கண்டுள்ள விபரப்படி ஊதிய நிர்ணயம் செய்ய உத்திரவிடப்பட்டுள்ளது.

265) பதிவு செய்யப்பட்டது

| வ. எண் | நிலை | ஊதிய விகிதம் | பணியாற்றிய ஆண்டு |
|---|---|---|---|
| 1 | மருத்துவ அலுவர் நிலை I | PB-3 15600-39100+GP 5400 | தொடக்கம் |
| 2. | மருத்துவ அலுவலர் நிலை I | PB-3 15600-39100+GP 5700 | 8 ஆண்டுகள் |
| 3. | முதுநிலை மருத்துவ அலுவலர் நிலை II | PB-3 15600-39100+GP 6600 | 15 ஆண்டுகள் |
| 4 | முதுநிலை மருத்துவ அலுவலர் நிலை I | PB-3 15600-39100+GP 7600 | – |
| 5. | முதன்மை மருத்துவ அலுவலர் | PB-3 37400-67000 + GP8700 | 20 ஆண்டுகள் |

அரசாணையில் தெரிவித்துள்ளபடி மாநகராட்சியில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கு பதவி உயர்வுடன் கூடிய ஊதிய உயர்வு 26.11.2010 முதல் வழங்க அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்

எச்1/9527/11

| | | |
|---|---|---|
| | 8. இம்மாநகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள அரசு மருத்துவ கல்லூரியில் ஆய்வக நூட்பனர் தரம் IIல் பணிபுரிந்து வரும் திருமதி ஜெ.பெரியநாயகி மாற்று திறன் உடையவர் (உடல் ஊனமுற்றோர்) என்பதால் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொழில்வரித் தொகைக்கு விலக்கு அளிக்க கோரி உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பித்துள்ளார்கள்.<br><br>தூத்துக்குடி மாநகராட்சிக்கு பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்ட விதி 169H(c)ன்படி (அரசு ஆணைப்படி) திருமதி ஜெ.பெரியநாயகி, ஆய்வக நூட்பனர் தரம் II என்ற பணியாளருக்கு 2012–2013 இரண்டாம் அரையாண்டு முதல் தொழில்வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: அனுமதி வழங்கலாம்<br><br>அ15/20289/12 | 266) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது |
| | 9. தூத்துக்குடி மாநகராட்சி தற்போது 5 பஞ்சாயத்துக்கள் இணைக்கப்பட்டு 60 வார்டுகளை கொண்டுள்ள புதிதாக தரம் உயர்த்தப்பட்டு வளர்ச்சி பெற்று வரும் மாநகராட்சியாகும். இம்மாநகராட்சி பகுதியில் உத்தேசமாக 3.20 லட்சம் மக்கள் வசித்து வருகிறார்கள். மாநகராட்சி பகுதிகளில் உள்ள சுகாதாரத்தை பேணுவது மாநகராட்சியின் தலையாய பணியாகும். இந்நிலையில் இம்மாநகராட்சியில் 10.07.2012 முதல் மாநகர நல அலுவலர் பணியிடமும், 01.06.2011 முதல் பள்ளி மருத்துவ குழுவில் உள்ள முதன்மை குடிமை மருத்துவ அலுவலர் பணியிடமும் காலியாக உள்ளது. மேலும் 30.10.2012 முதல் பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மருந்தக மருத்துவ அலுவலர் பணியிடமும் காலியான நிலையில் உள்ளது. இம்மாநகராட்சியின் கீழ் மூன்று நகர்நல மையங்களும், ஒரு மகப்பேறு மையமும் செயல்பட்டு வருகிறது. அதில் 3 பெண் மருத்துவ அலுவலர்கள் மட்டுமே பணியில் உள்ளார்கள். அவர்களில் ஒரு பெண் மருத்துவ அலுவலர் மாநகர நல அலுவலர் பொறுப்பினை கூடுதலாக கவனித்து வருகிறார். மேலும் தற்போது ஒரு பெண் மருத்துவர் மருத்துவ விடுப்பிலும் உள்ளார். இதனால் மகப்பேறு மையங்களில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவை பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளது. மேலும் இம்மாநகராட்சி பகுதிகள் அனைத்திற்கும் நோய் சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொண்டு, தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள பகுதி சுகாதார செவிலியர்கள் மூன்று பேர்கள் மட்டுமே பணியில் உள்ளார்கள். மாநகராட்சி பகுதிகளில் தற்பொழுது டெங்கு காய்ச்சல், கொடிய வைரஸ் காய்ச்சல் மற்றும் எச்1, என்1 வைரஸ் காய்ச்சல் நோய்கள் பரவாமல் தடுக்கும் பொருட்டும், பொதுமக்களின் சுகாதாரத்தினை பேனவும், பொதுமக்களின் உயிர்சேதாரம் ஏதும் ஏற்படாமல் தடுக்கும்பொருட்டும், மேற்படி நோய்களிலிருந்து பொது மக்களின் பாதுகாப்பு கருதி, நெருக்கடியான சமயங்களில் தேவையான பணியினை மேற்கொள்ள, மாநகராட்சி சட்டம் 15 பிரிவின்படி, இம்மாநகராட்சியில் காலியாக உள்ள மருத்துவ அலுவலர் பணியிடங்களுக்கு தொகுப்பூதிய அடிப்படையில் 5 தற்காலிகமாக இரண்டு பெண் மருத்துவ அலுவலர்களை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பணியமர்த்த அவசர அவசியம் கருதி நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினங்களை இம்மாநகராட்சியின் பொதுநிதியில் இருந்து செலவு செய்திடவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.**<u>அலுவலகக் குறிப்பு</u>**: அனுமதிக்கலாம்<br><br>எச்1/19274/10 | 267) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 10. தூத்துக்குடி மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் மாநகராட்சியால் அனுமதிக்கப்பட்ட 17 சுகாதார ஆய்வாளர் பணியிடங்கள் மூலம் இம்மாநகராட்சியின் பொது சுகாதாரப்பணிகள் மற்றும் அரசினால் அறிவிக்கப்படும் பொது சுகாதார திட்டப்பணிகள் அனைத்தும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி பணிகளை சிறப்பாக செயல்படுத்தும் விதமாகவும், சுகாதார ஆய்வாளர்களின் கோரிக்கையின்படியும், நிர்வாக நலன் கருதியும் மண்டலத்திற்கு ஒரு சுகாதார அலுவலர் வீதம் 4 சுகாதார அலுவலரும், மைய அலுவலகத்திற்கு ஒரு சுகாதார அலுவலருமாக மொத்தம் 5 சுகாதார அலுவலர்கள் அரசாணை எண் 186 நாள் 26.12.2010ன்படி 5900–200–9900 (தற்போதைய ஊதிய விகிதம் 9300–34800+4500) 6வது ஊதியக் குழுவின் பரிந்துரைபடியான ஊதிய விகிதப்படி, புதிதாகப் பணியிடங்கள் தோற்றுவிக்க அரசின் அனுமதி பெற்று நியமனம் செய்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br><br>தூத்துக்குடி மாநகராட்சியில் பணிபுரியும் சுகாதார ஆய்வாளர்கள், ஐந்து சுகாதார அலுவலர் பணியிடங்கள் தோற்றுவித்து பதவி உயர்வு வழங்க வேண்டி கோரியுள்ளதாலும், பொதுசுகாதாரப் பணிகள் மற்றும் அரசினால் அறிவிக்கப்படும் பொது சுகாதார திட்டப்பணிகள் முதலியவற்றை நல்லமுறையில் செயல்படுத்தும் பொருட்டும், இம்மாநகராட்சியில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு சுகாதார அலுவலர் வீதம் நான்கு சுகாதார அலுவலர் பணியிடமும் மற்றும் மைய அலுவலகத்தில் மாநகர நல அலுவலருக்கு உதவியாக ஒரு சுகாதார அலுவலருமாக மொத்தம் 5 சுகாதார அலுவலர் பணியிடங்கள் (Sanitary Officer) 6வது ஊதியக்குழு பரிந்துரையின்படி 5900–200–9900 அதாவது தற்போதைய 9300–34800+4500 என்ற ஊதியத்திற்கு இணையான ஊதிய அடிப்படையில் தோற்றுவிக்க அரசின் அனுமதி பெற்று நியமனம் செய்வதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>எச்1/9840/11 | 268) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது |
| | 11. தூத்துக்குடி தொகுதி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் (2012–13)ன் கீழ், தூத்துக்குடி மாநகராட்சி அண்ணாநகர், மகிழ்ச்சிபுரம் மற்றும் மங்களபுரம் பகுதியில் வடிகால் மற்றும் தார்சாலை அமைக்கும் பணிக்கு, தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண் அ2/6184/2012 நாள் 17.09.2012ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு, 15.11.2012 அன்று கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல்,<br><br>1) திரு. P. ஜெபர்சன் சாமுவேல் ராஜ் – மதிப்பீட்டை விட 5.40% அதிகம்<br>2) திரு. எஸ். ரம்போலா – மதிப்பீட்டை விட 8.42% அதிகம்<br><br>மேற்படி பணிக்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் விலைக்குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. P. ஜெபர்சன் சாமுவேல்ராஜ் அவர்களிடம் விலைக்குறைப்பு கேட்கப்பட்டதில் அவர் 27.11.2012 அன்று கடிதம் மூலம் | 269) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | விலைக்குறைப்பு கொடுத்துள்ளார். அதனடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஒப்புநோக்குப் பட்டியல் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மேற்படி பணிக்கு திரு P. ஜெபர்சன் சாமுவேல்ராஜ் மதிப்பீட்டை விட 0.04% குறைவாக (ரூ.15,86,460/—) கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.<br>ம.ப.எண் 239/12—13 | |
| | 12. | கடைசி பக்கம் இணைக்கப்பட்டுள்ளது | 270)அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |
| | 13. | இம்மாநகராட்சி வார்டு எண் 29, ரைஸ்மில் தெரு பகுதியில் குடிநீர் விநியோகம் சீரமைக்க கூடுதலாக பகிர்மான குழாய் பதிக்கவும், காளியப்பர் தெரு, வடக்கு சம்பந்த மூர்த்தி தெரு மற்றும் பெருமாள் கோவில் தெரு பகுதிகளில் குடிநீரில் சாக்கடை நீர் கலந்ததை புதிய பகிர்மான குழாய் பதித்து குடிநீர் விநியோகத்தை சீரமைக்கவும், மாநகராட்சி விதி எண் 15ன் கீழ் ரூ.56068/— செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**: மாமன்றம் பதிவு செய்யலாம்.<br><br>ம.ப. எண் 243/12—13 | 271) பதிவு செய்யப்பட்டது |
| | 14. | இம்மாநகராட்சி பகுதி பாலவிநாயகர் கோவில் தெரு, டுவிபுரம் மற்றும் பாளையங்கோட்டை ரோடு ஆகிய பகுதிகளில் உள்ள பாதாளச்சாக்கடை மூடி மற்றும் தொட்டியின் சுவர் சரிசெய்யும் பணிக்கு மாநகராட்சி விதி எண் 15ன் கீழ் ரூ.88959/— செலவு செய்தது மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் பதிவு செய்யலாம்.<br>ம.ப.எண் 258/12—13 | 272) பதிவு செய்யப்பட்டது |
| | 15. | தற்போது தமிழக அரசால் சூரிய சக்தி கொள்கை வெளியிடப்பட்டுள்ளது. இதன் விவரம்<br><br>    <u>2013</u> <u>2014</u><br>உயர்மின் அழுத்த நுகர்வோர் (H.T. Consumers) 3% 6%<br><br>L.T. Consumer 3% 6% (டேரிப் 5 பயன்பாடு)<br><br>சூரிய சக்தியை பயன்படுத்தி மேற்கண்ட சதவீதம் மின்சாரம் உற்பத்தி செய்து பயன்படுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.<br><br>இது சம்பந்தமாக தமிழ்நாடு எரிசக்தி (TEDA) வளர்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம் (TANGEDCO) அனுமதிகள் பெற வேண்டி உள்ளது.<br><br>இதன்படி உரிய துறைகள் அனுமதி பெற்று அரசின் விதிமுறைகள் (Rules) வழிகாட்டு நெறிமுறைகள் (Guidelines)படி மேல்நடவடிக்கைகள் தொடரவும் செலவினங்களுக்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகின்றது. | 273) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அனுமதி அளிக்கலாம்

இ3/20584/12

16. அரசாணை எண் 48 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மா.ந) நாள் 22.05.2012ல் தூத்துக்குடி மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ள 1 உதவி செயற்பொறியாளர் பணியிடத்திற்கு வகுப்பு II, Group II Category Iல் இருந்து தகுதியான உதவி/இளநிலை பொறியாளர்களில் இருந்து பதவி உயர்வு மூலம் வகுப்பு II, Group I Category Iல் உள்ள உதவி செயற்பொறியாளர் பணியிடத்திற்கு நியமனம் செய்ய வேண்டும். அதன் பேரில் உதவி/இளநிலை பொறியாளர்களுக்கான தற்காலிக முன்னிரிமை பட்டியல்தயார் செய்யப்பட்டு ஆட்சேபனை கோரப்பட்டது. வரப்பெற்ற ஆட்சேபனைகளை பரிசீலித்து ஆட்சேபனை செய்யப்பட்டுள்ள நபர்கள் தகுதியில்லாத காரணத்தினால், கீழ்க்கண்ட இரு உதவி பொறியாளர்கள் மட்டும் முதுநிலை பட்டியலில் சேர்க்கப்பட தகுதியுள்ளவர்களாக கருதி மாமன்ற ஒப்புதலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பெயர் | கல்வித்தகுதி | பணியில் சேர்ந்த நாள் | உதவி பொறியர் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|---|
| 1. | திரு. அ.ராமச்சந்திரன், உதவி பொறியாளர் | B.E.(Civil & MBA) | 17.02.1992 | 16.12.2011 |
| 2. | திருமதி. க. காந்திமதி, உதவி பொறியாளர் | B.E. (Civil) | 07.05.1997 | 16.12.2011 |

மேலும் மேற்கண்ட இரு நபர்களில் முதுநிலைப்படி முதலாவதாகவுள்ள திரு. அ.இராமச்சந்திரன் உதவி பொறியாளர் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள ஒரு உதவி செயற்பொறியாளர் பணியிடத்தில் பதவி உயர்வு செய்து, அரசின் அனுமதி பெற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

உதவி செயற்பொறியாளர் பணியிடத்திற்கு உதவி பொறியாளர் பணியிடத்தில் பொறியியல் பிரிவில் ஒரு வருடமும், மத்திய அலுவலகத்திலும், மூன்று வருடம் மண்டல அலுவலகத்திலும் பணிபுரிய வேண்டும் என்ற விதியினை அரசாணை எண் 237 நநிமகுவ (தேர்தல்) துறை நாள் 26.09.96ன் இணைப்பு I பொது வழிகாட்டி (A) பத்தி எண் 2ன்படி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி அ.இராமச்சந்திரன், உதவி பொறியாளருக்கு உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு வழங்கவும், அரசின் உறுதி ஆக்கம் பெற பிரேரணை அனுப்பவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ2/13135/12

274) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

17. தூத்துக்குடி மாநகராட்சி மாசிலாமணிபுரம் 3வது தெருவில் அரசு ஊழியர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திற்கு மனைப்பிரிவு L.P.H/DTP No.16/56 எண்ணில் நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களால் மனைப்பிரிவு அனுமதி வழங்கப்பட்டு, வார்டு சி, பிளாக் 66, நகரளவு எண் 3ல் 1900 ச.மீட்டர் பூங்காவிற்காக இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி இடம் மாநகராட்சிக்கு இந்நாள் வரை ஒப்படைக்கவில்லை. மேற்படி இடம் ஆவணங்களில் வார்டு சி, பிளாக் 66, நகரளவு

275) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

| | | | |
|---|---|---|---|
| | | எண் 3ல் G.R. நத்தம் பூங்கா என பதிவாகியுள்ளது. மேற்படி மனைப்பிரிவு பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் 214ச.மீ. பரப்பளவு இடம் சங்கம் அலுவலகம் கட்டிடத்திற்கு ஒதுக்கப்பட்டு LPH/DTP No.4/70ல் நகர் ஊரமைப்பு இயக்குநரின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 1686 சதுர மீட்டர் இடத்தில் திருமண மண்டபம் மற்றும் சமுதாய கூடம் கட்டிடம் கட்டுவதற்கு "வெல்பர் அசோசியேசன் பார் தி வீக்கஸ்ட்'' நிறுவனத்திற்கு குத்தகைக்கு அனுமதி வழங்கி வருவாய்த் துறை அரசாணை (நிலை) எண் 447 நாள் 14.07.94ல் உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் திரு. என்.மகேந்திரன் மற்றும் மூவர் தூத்துக்குடி நீதிமன்றத்தில் O.S. 562/96 எண்ணில் வெல்பர் அசோசியேசன் பார் தி வீக்கஸ்ட் மற்றும் அரசு ஊழியர் வீடு கட்டும் சங்கம் ஆகியோருக்கு எதிராக தொடர்ந்த வழக்கில் மேற்படி இடத்தினை பொதுமக்கள் பூங்கா மற்றும் விளையாட்டு மைதானமாக உபயோகப்படுத்த இடையூறு செய்யக்கூடாது எனவும் பிரதிவாதி கட்டிடம் கட்டக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பிக்கப்பட்டு 30.01.1997ல் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் கட்டிடம் எதுவும் கட்டப்படவில்லை. மேலும் திரு. எஸ்.முத்துசாமி என்பவர் தொடர்ந்த சென்னை உயர்நீதிமன்றம் வழக்கு W.P.18473/1994ல் வருவாய் துறையில் பிறப்பிக்கப்பட்ட உத்திரவினை செயல்படுத்தக் கூடாது என தடை உத்திரவு 01.11.1994ல் பிறப்பிக்கப்பட்டு பின்பு மேற்படி இடம் தற்போதுள்ள நிலையில் இருக்க வேண்டும் (Status quo) எனவும், பூங்காவாக பராமரிக்க வேண்டும் எனவும் 18.10.2010ல் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.<br><br>அ) எனவே வார்டு சி, பிளாக் 66, நகரளவு எண் 3 இடத்தில் சங்க கட்டிடம் போக மீதமுள்ள 1686 ச.மீ. இடத்தினை மாநகராட்சி வசம் எடுத்துக் கொண்டு பூங்காவாக பராமரிக்கவும்,<br><br>ஆ) மேற்படி பூங்காவை நகர் ஊரமைப்பு சட்டப்படி பிரகடனப்படுத்த நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம்<br><br>எப்1/9929/11 | |
| | 18. | இம்மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட திருநெல்வேலி சாலையில் உள்ள மையவாடியில் மின்கடத்திகள் மற்றும் மின் விளக்குகள் அமைத்துக் கொள்ளவும், இப்பணியை தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் செய்து கொள்ளவும் இதற்கான செலவினத்திற்கும் மாமன்ற ஒப்புதல் வேண்டப்படுகின்றது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** அனுமதி அளிக்கலாம்.<br><br>இ3/21076/2012 | 276) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது |
| | 19. | இம்மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட 32 குத்தகை இனங்களுக்கு அரசாணை எண் 78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 25.05.2009ன்படி மூன்றாண்டு தொகுப்பு (2010–2013) அடிப்படையில் பட்டியலில் குறிப்பிட்டுள்ள வரிசை எண் 1 முதல் 26 இனங்களுக்கு குத்தகை அடிப்படையில் உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உரிமை காலம் 31.03.2013ல் நிறைவு பெறவுள்ளதால் மீண்டும் 01.04.2013 முதல் 31.03.2016 வரை மூன்றாண்டு தொகுப்பு அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் நடத்தவும் இவ்வகைக்கு ஏற்படும் செலவினங்களுக்கு இம்மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | 277) அலுவலகக்குறிப்பு 1,2,3 மற்றும் 4 அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | உரிமை விபரம் |
|---|---|
| 1. | விக்டோரியா தொடர் சாலையில் உள்ள வ.உ.சிதம்பரம் மாநகராட்சி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை மற்றும் மீன் சந்தை வியாபாரிகளுக்கு தட்டு முட்டு சாமான்கள் சப்ளை செய்து கட்டணம் வசூலிக்கும் உரிமை |
| 2. | எஸ்.எஸ். தெரு மாநகராட்சி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை |
| 3. | சிதம்பரநகர் மாநகராட்சி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை |
| 4. | கீழரதவீதி தொடர்ச்சி மாநகராட்சி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை மற்றும் கீழரதவீதி சாலை ஓர கடைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமை |
| 5. | கோபால்சாமி தெரு மாநகராட்சி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை |
| 6. | தச்சர் தெரு மாநகராட்சி சந்தையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை |
| 7. | மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்தினுள் வந்து போகும் பேருந்துகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூபாய் பதினைந்து கட்டணம் வசூலிக்கும் உரிமை |
| 8. | மாநகராட்சி பழைய பேருந்து நிலையத்தினுள் வந்து போகும் பேருந்துகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூபாய் பத்து கட்டணம் வசூலிக்கும் உரிமை |
| 9. | மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்தினுள் சைக்கிள் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை |
| 10 | மாநகராட்சி பழைய பேருந்து நிலையத்தினுள் சைக்கிள் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை |
| 11 | ஜெயராஜ் ரோட்டில் உள்ள மாநகராட்சி வணிக வளாக காம்பவுண்டுக்குள் மாநகராட்சியால் அனுமதிக்கப்படும் இடத்தில் நிறுத்தப்படும் சைக்கிள்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமை |
| 12 | மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்திலுள்ள நவீன கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை |
| 13 | மாநகராட்சி பழைய பேருந்து நிலையத்திலுள்ள நவீன கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை |
| 14 | மாநகராட்சி தெற்கு காட்டன் ரோட்டிலுள்ள நவீன கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை |
| 15 | மாநகராட்சி மாசிலாமணி பூங்காவிலுள்ள நவீன கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 16. | மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்திலும் சுற்றியுள்ள பகுதிகளிலும் 'பூ' தலைச்சுமை மூலம் கூவி விற்கும் உரிமை | | |
| | | 17. | மாநகராட்சி பழைய பேருந்து நிலையத்திலுள்ள பகுதிகளிலும் 'பூ' தலைச்சுமை மூலம் கூவி விற்கும் உரிமை | | |
| | | 18. | மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் 'செய்தித்தாள்' தலைச்சுமை மூலம் கூவி விற்கும் உரிமை | | |
| | | 19 | மாநகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் 'செய்தித்தாள்' தலைச்சுமை மூலம் கூவி விற்கும் உரிமை | | |
| | | 20 | மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் 'வளையல்' தலைச்சுமை மூலம் கூவி விற்கும் உரிமை | | |
| | | 21 | மாநகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் 'வளையல்' தலைச்சுமை மூலம் கூவி விற்கும் உரிமை | | |
| | | 22 | மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் நகராட்சியால் அனுமதிக்கப்படும் இடத்தில் ஒரு தானாக இயங்கும் எடை பார்க்கும் இயந்திரம் நிறுவிக் கொள்ளும் உரிமை | | |
| | | 23 | மாநகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் நகராட்சியால் அனுமதிக்கப்படும் இடத்தில் ஒரு தானாக இயங்கும் எடை பார்க்கும் இயந்திரம் நிறுவிக் கொள்ளும் உரிமை | | |
| | | 24 | பழைய பேருந்து நிலையத்திலுள்ள தங்கும் விடுதியின் (4 டபுள் காட் ரூம், 8 சிங்கிள் ரூம்) மேற்படி 12 அறைகளுக்கும் வாடகை கட்டணம் வசூல் செய்யும் உரிமை | | |
| | | 25. | மாநகராட்சி பகுதியில் மாடுகள் அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | | |
| | | 26. | புதிய பேருந்து நிலையம் அருகில் மாநகராட்சி பகுதியில் ஆடுகள் அறுக்கும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (1 முதல் 7 வரை, 34 முதல் 39 வரை, 41 முதல் 44 வரை மற்றும் 46 முதல் 49 வரை உள்ள வார்டுகள்) | | |
| | | 27. | சத்திரம் தெருவிலிருக்கு அறிஞர் அண்ணா திருமண மண்டபம் | | |
| | | 28. | பண்டு கரை சாலையில் – 3வது ரயில்வே கேட் மேம்பாலம் – மேம்பாலம் இறக்கம் மேல்பக்க பகுதி முதல் 4ம் கேட் சிறிய பாலம் கிழக்கு பகுதி முழுவதும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் | | |
| | | 29. | வ.உ.சி. சந்தையில் புதிதாக கட்டப்பட்டிருக்கும் நவீன ஆட்டிறைச்சிக் கூடம் (வார்டு எண் 25 முதல் 33 வரை, 40, 45, 50 முதல் 60 வரை) | | |
| | | 30. | எஸ்.எஸ். தெருவிலிருக்கும் தினசரி சந்தையில் புதிதாக கட்டப்பட்டிருக்கும் நவீன ஆட்டிறைச்சிக் கூடம் (வார்டு எண் 8 முதல் 24 வரை) | | |
| | | 31. | மாநகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் நகராட்சியால் அனுமதிக்கப்படும் இடத்தில் தொலைக்காட்சி பெட்டி | | |

<table>
<tr><td></td><td>

| | |
|---|---|
| | விளம்பரம் செய்யும் உரிமை |
| 32. | மாநகராட்சி பழைய பேருந்து நிலையத்தில் நகராட்சியால் அனுமதிக்கப்படும் இடத்தில் தொலைக்காட்சி பெட்டி விளம்மரம் செய்யும் உரிமை |

வரிசை எண் 27 சத்திரம் தெருவில் இருக்கும் அறிஞர் அண்ணா திருமண மண்டபம் மாநகராட்சியால் நடத்தப்பட்டு வருகிறது. தற்போது பணியாளர்கள் பற்றாக்குறை காரணத்தால் மண்டபம் சரியான பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு இல்லாமல் உள்ளது. தற்போது ஒவ்வொரு நிதியாண்டிற்கும் சுமார் 35 திருமணங்கள் நடைபெறுகிறது. அதன் மூலம் மாநகராட்சிக்கு வருமானம் ரூ.525000/– வருகிறது. (இதில் சேவை வரி, முன்பண வைப்புத் தொகை, வருமான வரித் தொகை சேராது) இந்த இனத்தை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

வரிசை 28 மாநகராட்சி பண்டு கரை சாலையில் – 3வது ரயில்வே கேட் மேம்பாலம் – மேம்பாலம் இறக்கம் மேல்பக்க பகுதி முதல் 4ம் கேட் சிறிய பாலம் கிழக்குப் பகுதி முழுவதும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

வரிசை எண் 29 மற்றும் 30 தற்போது புதிதாக கட்டப்பட்டுள்ள எஸ்.எஸ்.தெருவிலிருக்கும் தினசரி சந்தை மற்றும் வ.உ.சி. சந்தையில் நவீன ஆட்டிறைச்சிக் கூடம் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விடுவதற்கு மன்ற அனுமதியும் வேண்டப்படுகிறது.

வரிசை எண் 31 மற்றும் 32 மாநகராட்சி புதிய பழைய பேருந்து நிலையத்தில் நகராட்சியால் அனுமதிக்கப்படும் இடத்தில் தொலைக்காட்சி பெட்டி விளம்பரம் செய்ய ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விட மன்ற அனுமதியும் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1) வரிசை எண் 1 முதல் 32 வரை உள்ள இனங்களுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கலாம்.
2) வரிசை எண் 26 முதல் 32 வரை உள்ள புதிதாக சேர்க்கப்பட்டுள்ள இனத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
3) 2013–2016 (01.04.2013 முதல் 31.03.2016 வரை) ஆண்டிற்கான தூத்துக்குடி மாநகராட்சி உரிய இனங்கள் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் காணும் பொது நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
4) இவ்வகைக்கு ஏற்படும் நாளிதழ் விளம்பரம் மற்றும் பிரிண்டிங்கிற்கு ஆகும் செலவினங்களுக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ16/020353/12
</td><td></td></tr>
<tr><td></td><td>20.</td><td>இம்மாநகராட்சி பகுதியில் நகர்ப்புற குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பூபாலராயர்புரம் இன்பார்மல் மார்க்கெட் (மட்டன் மார்க்கெட், காய்கனி மார்க்கெட், மீன் மார்க்கெட்) 2012–13 ஆண்டுக்கு அனுபவிக்கும் உரிமைக்கான கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கான ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 10.12.2012 அன்று நடைபெற்றது.<br><br>மேற்படி இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி மூலம் கீழ்க்கண்டவாறு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.</td><td>278) அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | <table><tr><td>வ. எண்</td><td>ஒப்பந்தப்புள்ளி முன்பணம் செலுத்தி ஒப்பந்தப்புளி கோரியவரின் பெயர் மற்றும் முகவரி</td><td>கேட்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகை</td></tr><tr><td>1.</td><td>டி.அருண்குமார், 175/5எச், திரேஸ்புரம், தூத்துக்குடி</td><td>ரூ. 101900/–</td></tr><tr><td>2.</td><td>எக்ஸ். மரியதாஸ், 175/5, திரேஸ்புரம், தூத்துக்குடி</td><td>ரூ. 101000/–</td></tr></table><br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br><br>1) மேற்படி இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி மூலம் வரிசை எண் 1ல் கண்டுள்ள திரு.டி.அருண்குமார் என்பவர் வரிசை எண் 2ல் கண்டுள்ள திரு. எக்ஸ்.மரியதாஸ் என்பவரை விட ரூ.900/– அதிகமாக கோரியுள்ளார். எனவே திரு. அருண்குமார் என்பவரின் உச்ச கேள்வி ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ.101900/–ஐ ஏற்று 01.01.2013 முதல் 31.12.2015 வரை மூன்று ஆண்டுகளுக்கு தொகுப்பு அடிப்படையில் அரசாணை எண் 78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 25.05.2009ன்படி திரு. அருண்குமார் என்பவருக்கு உரிமம் வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>2) மேலும், மேற்படி உரிமம் பெற்றவரே மேற்படி கட்டிடத்தை துப்புரவு பணி, மராமத்து பணி ஆகிய பணிகள் பராமரித்துக்கொள்ளவும் தெரிவித்து உத்திரவு வழங்கவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>அ16/18429/12 | |
| | 21. தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் தொடரப்படும் வழக்குகளில் ஆஜராக அரசாணை எண் (Rt) சூடி.416 நாள் 02.08.12ன்படி திரு. அப்துல் சலீம் என்ற சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞரை நியமனம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி திரு. அப்துல்சலீம் வழக்கறிஞர் அவர்கள் மாநகராட்சி தொடர்பாக தொடரப்படும் வழக்குகள் தொடர்பாக உத்திரவு வழங்குமாறு தனது 19.12.2012ம் தேதிய மின்னஞ்சல் கடிதம் மூலம் விண்ணப்பித்துள்ளார்.<br>எனவே அன்னாரை அன்னாரின் விண்ணப்பத்தின் பேரிலும் அரசாணையின்படியும் தூத்துக்குடி மாநகராட்சி தரப்பில் தேசிய பசுமை தீர்ப்பாய வழக்கறிஞராக நியமனம் செய்து உத்திரவு வழங்க அன்னாரின் விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு :</u>** அரசாணையின்படி திரு.அப்துல் சலீம் என்ற சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அவர்களை தூத்துக்குடி மாநகராட்சியின் தேசிய பசுமை தீர்ப்பாய வழக்கறிஞராக நியமனம் செய்து உத்திரவு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>சி5/21410/2012 | 279) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது |
| | 22. இம்மாநகராட்சி டூவிபுரம் 5வது தெருவிலுள்ள ஆணையர் குடியிருப்பை மேயர் பங்களாவாக மாற்றவும் மதிப்பீடு ரூ.60.00 லட்சத்தில் கூடுதல் தரைத்தளம் மற்றும் முதல் தளம் கட்டுவதற்கும் இம்மாமன்றம் தீர்மானம் எண் 210 நாள் 26.09.12ல் | 280) அலுவலகக் குறிப்புபடி |

| | | |
|---|---|---|
| | அனுமதி அளித்துள்ளது.<br><br>மேற்படி கட்டிடம் 1963ம் வருடம் கட்டப்பட்ட கட்டிடமாகும். மேற்படி கட்டிடத்தின் உறுதி தன்மை ஆய்வு செய்யப்பட்டதில், முதல் தளம் கட்டிடம் கட்டுவதற்கு அஸ்திவாரம் போதுமான தாங்கும் திறன் இல்லாமல் உள்ளது. எனவே நிலையிலுள்ள கட்டிடத்திற்கு உறுதி தன்மை இல்லாததால் மேற்படி கட்டிடத்தை அப்புறப்படுத்தி விட்டு புதிதாக கட்டிடம் கட்டலாம். மேற்படி கட்டிடம் கட்டுவதற்கு ரூ.125.00 லட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.<br><br>எனவே மேற்படி பழைய கட்டிடத்தை அப்புறப்படுத்துவதற்கும், புதிதாக ரூ.125.00 லட்சம் மதிப்பீட்டில் மேயர் பங்களா கட்டிடம் கட்டுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட செலவினம் திருத்திய வரவு செலவுத் திட்டத்தின் கீழ் சேர்க்கலாம்.<br><br>ம.ப.எண் 157/12–13 | அனுமதிக்கப்பட்டது |
| | 23. தூத்துக்குடி மாநகராட்சி இராஜாஜி பூங்காவில் மாநகராட்சிக்கு சொந்தமான குடியிருப்புகளில் கதவு இலக்க எண் 196 மற்றும் 194 கொண்ட இரண்டு வீடுகள் காலியாக உள்ளன. மேற்படி வீடுகளை குடியிருப்புக்கு பயன்படுத்தும் வகையில் இம்மாநகராட்சியில் பம்ப் துலக்குனராக பணிபுரியும் திரு.பாக்கியநாதன் என்பவர் கதவு இலக்க எண் 194 கொண்ட வீட்டினையும் இம்மாநகராட்சியில் பணி ஒதுக்கீட்டின்படி குடிநீர் விநியோக பணியாளராக பணிபுரியும் திரு. அறிவழகன் என்பவர் கதவு எண் 196 கொண்ட வீட்டினையும் ஒதுக்கீடு செய்து தருமாறு கோரி விண்ணப்பித்துள்ளனர். அத்தியாவசியமான பணியான குடிநீர் விநியோக பணியினை செய்து வருவதாலும் அன்னார்களது பணி எந்த நேரத்திலும் தேவை இருப்பதாலும் அன்னார்களுக்கு மேற்படி இராஜாஜி பூங்கா குடியிருப்பு வீடுகளை அரசு விதிகளுக்குட்பட்டு ஒதுக்கீடு செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு :</u>** இராஜாஜி பூங்கா கதவிலக்க எண் 194கொண்ட வீட்டினை திரு.எஸ்.பாக்கியநாதன் என்பவருக்கும் கதவிலக்க எண் 196 கொண்ட வீட்டினை திரு. அறிவழகன் என்பவருக்கும் அரசு விதிகளின்படி வாடகை நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்யலாம்.<br><br>இ2/20956/2012 | 281) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது |
| | 24. இம்மாநகராட்சி வார்டு எண் 11, முத்துகிருஷ்ணாபுரம் 6வது தெரு பகுதியில் பொது மக்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால், தற்போது மேற்கண்ட இடத்தில் ஆக்கிரமிப்புகள் மாநகராட்சி மூலம் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட இடம் முத்துகிருஷ்ணாபுரம் 6வது தெரு, சர்வே வார்டு 4, பிளாக் எண் 48, டவுன் சர்வே எண் 5828/4 என்ற இடம் ஜி.ஆர்.நத்தம் என நில பதிவேட்டில் இருந்து வருகிறது என நகர்சார் ஆய்வாளர் 1 அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>எனவே மேற்கண்ட இடத்தில் தொடர் ஆக்கிரமிப்புகள் ஏற்படாமலிருக்க சத்துணவு மையம் ஒன்று கட்டுவதற்கும், மேலும் சத்துணவு மையம் கட்டுவதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.5.70 இலட்சம் ஆகும். மேற்படி | 282) அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | செலவினத்தை கல்விநிதியில் செலவினம் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>எப்1/9929/2011 | |
